# பொதுக்காலத்தின் இருபத்தாறாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2024-09-29

(*இன்றைய வாசகங்கள்:*

*எண்ணிக்கை நூலிலிருந்து வாசகம்:* 11:25-30,

*பதிலுரைப்பாடல் திபா.* 19:7,9, 11-13,

*திருத்தூதர் யாக்கோபு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்:* 5:1-6,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்:* 9: 38-48)

**திருப்பலி முன்னுரை**

*கடவுளுக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்தாறாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். நமது பாவ இயல்புகளைக் களைந்துவிட்டு கடவுளுக்கு உரியவர்களாக வாழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. உண்மை கடவுளை அறிந்துகொள்ளாத மற்றவர்கள் முன்னிலையில், கடவுளுக்கு சான்று பகர்பவர்களாக வாழவும், கிறிஸ்துவின் பெயரால் நற்செயல் புரிவோரை ஏற்றுக்கொள்ளவும் நாம் அழைக்கப்படுகிறோம். நமது உடல் உறுப்புகளைக் கொண்டு பாவம் செய்வதை விட, அவற்றை வெட்டி எரிந்துவிடுவதே நல்லது என்ற கடுமையான வார்த்தைகள் இயேசுவின் வாயில் இருந்து புறப்படுவதை இன்றைய நற்செய்தியில் காண்கிறோம். ஆண்டவரின் ஆவியைப் பெற்றவர்களாய், புனிதமான வாழ்வு வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*மீட்பராகிய இறைவா!*

*எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் தீயசக்திகளிடமிருந்து பாதுகாத்து நல்ல உடல் உள்ள சுகத்தையும், ஆன்மீக பலத்தையும், பாதுகாப்பையும் கொடுத்து வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வழிகாட்டும் தெய்வமே இறைவா!*

*மக்கள் அனைவரும் இவ்வுலக வாழ்வில் தங்கள் மனதைச் செலுத்துவதிலே நோக்கமாயிராமல் ஆன்மிக வாழ்வில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா!*

*சமுதாயத்தில் வாழும் தாழ்த்தப்பட்டோர், விதவைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர் இவர்களின் வாழ்வு மலர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பின் இறைவா!*

*உமது கட்டளைகளைக் கடைப்பிடித்து நீதி நேர்மையோடு வாழவும், , தீய வார்த்தைகள் பேசுவதைத் தவிர்த்து ஒவ்வொரு சொல்லும் உமக்கு ஏற்றவையாகவும், உள்ளத்தில் எழும் எண்ணங்கள் உமக்கு உகந்தவையாகவும் இருக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*கருணைக் கடலே இறைவா!*

*ஆடம்பரமாகவும், இன்பமாகவும் வாழ்ந்து பணத்தையும், நேரத்தையும் வீணாக்கி மனம்போன போக்கில் வாழாமல் பாவ வாழ்க்கையை விட்டு கிறிஸ்துவோடு இணைந்து வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*துன்பங்களை நீக்குபவராம் இறைவா,*

*உலகெங்கும் நீதிக்காகவும், அமைதிக்காகவும் ஏங்கும் உமது மக்களின் துன்பங்களை நீக்கி, அவர்கள் விரும்பும் நீதியும் அமைதியும் நிறைந்த உலகை உருவாக்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*துன்புற அழைப்பவராம் இறைவா,*

*உம் திருமகன் இயேசுவின் சிலுவைப் பயணத்தைப் பின்பற்றி, இறையாட்சியின் இலட்சியங்களுக்காக தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் நல்ல உள்ளத்தை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் தந்தருள வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.*